பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

02 11 2024 **SATURDAY** **7.15 PM**

ஆகாஷவாணி
<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்திய – சீன எல்லைப்பகுதியில் இருநாட்டு ராணுவ வீரர்களை சரிபார்க்கும் பணி தொடங்கப்பட்டுள்ளதாக இந்திய வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

2. தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஐ நா சர்வதேச தொழிலாளர் அமைப்பு மாநாட்டில் இந்தியா தெரிவித்துள்ளது.

3. நான்கு நாள் பயணமாக புதுதில்லி வந்துள்ள தாய்லாந்து வெளியுறவுத்துறை அமைச்சர் திரு **Maris Sangiampongsa** இன்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரை சந்தித்து பேசினார்.
4. சாத் பண்டிகையையொட்டி, தில்லி உள்ளிட்ட முக்கிய நகரங்களிலிருந்து மூவாயிரத்து 200-க்கும் மேற்பட்ட சிறப்பு ரயில்களை வடக்கு ரயில்வே இயக்குகிறது.
5. இந்தியா “ஏ” அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் ஆஸ்திரேலியா “ஏ” அணி இன்றைய ஆட்டநேர இறுதியில் 3 விக்கெட் இழப்பிற்கு 139 ரன் எடுத்துள்ளது.

<u>*-- இனி விரிவான செய்திகள் ----*</u>

**<<<<<<>>>>>>**

இந்தியா – சீனா இடையே **Demchok** மற்றும் **Depsang** –ல் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களின் அடிப்படையில் எல்லைப்பகுதியில் உள்ள இருநாட்டு பாதுகாப்புப்படையினரை சரிபார்க்கும் நிகழ்ச்சி தொடங்கப்பட்டுள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால், எல்லைப்பகுதியில் ராணுவ நடவடிக்கைகளை குறைப்பது தொடர்பாக இறுதிக்கட்டப்பணிகளை அக்டோபர் 21-ஆம் தேதியே முடிவுக்கு கொண்டுவர ஒப்புக்கொள்ளப்பட்டதாகவும் கூறினார்.

சீனா உடனான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில், இருநாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் நிலையிலான பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

**<<<<<<>>>>>>**

தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை இந்தியா மேற்கொண்டு வருவதாக ஐ நா சர்வதேச தொழிலாளர் அமைப்பு மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

ஜெனிவாவில் நடைபெற்றுவரும் 352-ஆவது ஐ நா சர்வதேச தொழிலாளர் அமைப்பு மாநாட்டில் இந்தியா சார்பில் கலந்துகொண்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை செயலர் திருமதி **Sumita Dawra,** தொழிலாளர்களின் மேம்பாட்டுக்காக அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்கள் குறித்து தெரிவித்தார்.

இந்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கையால் கடந்த ஒன்பது ஆண்டுகளில் 248 மில்லியன் மக்கள் வறுமைக்கோட்டின் பிடியில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

வேலைவாய்ப்புக்கான பல்வேறு புதிய வாய்ப்புகளும் உருவாக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

பிரதமரின் ஜன்தன் யோஜனா திட்டத்தின்மூலம், நாட்டு மக்கள் அனைவருக்கும் வங்கிக்கணக்கு தொடங்கப்படடிருப்பதாகவும், இதனால் அரசின் மானிய உதவிகள் எவ்வித காலதாமதம் இன்றி உடனுக்குடன் மக்களுக்கு கிடைத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

விபத்து காப்பீடு, மருத்துவக்காப்பீடு உள்ளிட்ட திட்டங்களால் மக்கள் பெருமளவில் பயன்பெற்று வருவதாகவும் அவர் கூறினார்.

நிதி கட்டமைப்பு வலுப்படுத்தப்பட்டிருப்பதன் மூலம், மக்களுக்கு நிதிச்சேவைகள் தங்கு தடையின்றி கிடைத்து வருவதாகவும் திருமதி **Sumita Dawra** தெரிவித்தார்.

**<<<<<<>>>>>>**

நான்கு நாள் பயணமாக புதுதில்லி வந்துள்ள தாய்லாந்து வெளியுறவுத்துறை அமைச்சர் திரு **Maris Sangiampongsa** இன்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரை சந்தித்து பேசினார்.

ராயல்கதீனா நிகழ்ச்சியில் தாய்லாந்து வெளியுறவுத்துறை அமைச்சர் கலந்துகொள்வது இருநாடுகளுக்கும் இடையிலான நீண்டகால வரலாற்று கலாச்சார தொடர்புகளுக்கு உத்வேகம் அளிக்கும் வகையில் அமைந்துள்ளதாக கூறினார்.

இருநாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பு, வர்த்தகம், மற்றும் பாதுகாப்பு தொடர்பான விஷயங்கள் குறித்து இருதலைவர்களும் ஆலோசனை நடத்தினர்.

கௌதம புத்தரின் சிந்தனைகளை உலகெங்கும் எடுத்துச்செல்வதில் இந்தியாவும் – தாய்லாந்தும் முக்கிய பங்காற்றுவதாகவும் தாய்லாந்து வெளியுறவு அமைச்சர் தெரிவித்தார்.

**<<<<<<>>>>>>**

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், சிங்கப்பூர் மற்றும் ஆஸ்திரேலியாவுக்கு நாளை ஆறு நாள் பயணம் மேற்கொள்கிறார்.

முதலில் ஆஸ்திரேலியா செல்லும் திரு ஜெய்சங்கர், பிரிஸ்பெயின் நகரில் அமைக்கப்பட்டுள்ள நான்காவது இந்திய தூதரகத்தை அவர் திறந்துவைக்கிறார்.

அந்நாட்டின் தலைநகர் கான்பராவில் நடைபெறவுள்ள வெளியுறவுத்துறை அமைச்சர்கள் சந்திப்பில் ஆஸ்திரேலிய அமைச்சர் பென்னி வாங்குடன், இருதரப்பு ஒத்துழைப்பு, வர்த்தகம் மற்றும் பாதுகாப்பு குறித்து பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.

ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் உரையாற்றவுள்ளார்.

அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்திய வம்சாவளியினர் மற்றும் தொழில் அதிபர்களை தனித்தனியாக சந்தித்து அவர் பேச்சு நடத்தவுள்ளார்.

ஆஸ்திரேலிய பயணத்தை முடித்துக்கொண்டு வரும் 8-ஆம் தேதி சிங்கப்பூர் புறப்படும் திரு ஜெய்சங்கர், ஆசியான் வட்டமேசை மாநாட்டில் கலந்துகொள்கிறார்.

சிங்கப்பூர் தலைவர்களை சந்தித்து இருநாட்டுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்தும் அவர் பேச்சு நடத்தவுள்ளார்.

**<<<<<<>>>>>>**

எந்தவொரு மாநிலத்தில் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தாலும், அம்மாநிலம் பொருளாதார சிக்கலுக்கு உள்ளாகி வருவதாக பிஜேபி செய்தித்தொடர்பாளர் டாக்டர் சுதான்ஷூ திரிவேதி தெரிவித்துள்ளார்.

புததில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், காங்கிரஸ் ஆட்சிப்பொறுப்பேற்ற இமாச்சலப்பிரதேசத்திலும், கர்நாடகாவிலும் மாநில அரசுகள் கடும் நிதி நெருக்கடிக்கு உள்ளாகி வருவதாக கூறினார்.

மாநில அரசு ஊழியர்களுக்கு மாதாந்திர ஊதியம் வழங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

தேர்தலின்போது அக்கட்சி அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்று கூறிய அவர், மக்களின் வளர்ச்சிக்காக ஆக்கப்பூர்வமாக எதுவும் செய்யவில்லை என்றும் தெரிவித்தார்.

பிஜேபி மக்கள் நலனுக்காக செயல்பட்டு வருவதாகவும், காங்கிரஸ் ஆட்சிக்கு வந்து மக்களுக்கான அடிப்படை வசதிகளை செய்துதருவதில் கூட அக்கறை செலுத்துவதில்லை என்றும் டாக்டர் சுதான்ஷூ திரிவேதி கூறினார்.

**<<<<<<>>>>>>**

சூரிய பகவானுக்கு சிறப்பு பூஜை செய்வதற்கான சாத் பண்டிகையையொட்டி, வடக்கு ரயில்வே தில்லி உள்ளிட்ட முக்கிய ஊர்களிலிருந்து சிறப்பு ரயில்களை இயக்குகிறது.

ஆனந்த் விஹார், நிஜாமுதீன், புதுதில்லி ரயில் நிலையங்களிலிருந்து பல்வேறு முக்கிய ஊர்களுக்கு 3 ஆயிரத்து 200-க்கும் மேற்பட்ட சிறப்பு ரயில்களை வடக்கு ரயில்வே இயக்குவதாக ரயில்வே செய்தித்தொடர்பாளர் திரு ஹிமான்ஷு சேகர் உபாத்யாயா தெரிவித்துள்ளார்.

கிழக்கு மண்டலத்தில் மட்டும் 80 ரயில்கள் இயக்கப்படுவதாக அவர் கூறினார்.

தில்லி உள்ளிட்ட முக்கிய ரயில் நிலையங்களில் பயணியர் நெரிசலை குறைக்கும் வகையில், நடைமேடை டிக்கெட்டுகள் விநியோகிக்கப்படுவது நிறுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

உரிய பயணச்சீட்டு வைத்துள்ள பயணிகள் மட்டுமே ரயில் நிலையத்திற்குள் அனுமதிக்கப்படுவதால் நடைமேடைகள் கூட்ட நெரிசலை தவிர்க்க முடிவதாகவும் திரு ஹிமான்ஷு சேகர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

தெற்கு காஷ்மீரின் அனந்த்நாக் மாவட்டத்தில் இன்று பிற்பகல் பாதுகாப்புப்படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது இரண்டு தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

ஹல்கான்காலே பகுதியில் தேடுதல் பணியில் ஈடுபட்டிருந்தபோது பாதுகாப்புப்படையினரை நோக்கி தீவிரவாதிகள் துப்பாக்கிச்சூடு நடத்தியதாகவும், பதில் தாக்குதலில் இரண்டு தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகவும் பாதுகாப்புத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

கொல்லப்பட்ட தீவிரவாதிகளை அடையாளம் காண்பதற்கான பணிகள் நடைபெற்றுவருவதாகவும், அந்த பகுதியில் தேடுதல் நடவடிக்கைகள் மேலும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

ஸ்ரீநகரையொட்டியுள்ள கன்யா பகுதியிலும் பாதுகாப்புப்படையினர் தேடுதல் நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

<<<<<<>>>>>>

மத்திய உள்துறை அமைச்சருக்கு எதிராக கனடாவின் துணை அமைச்சர் டேவிட் மோரிசன் கருத்து தெரிவித்ததற்கு இந்தியா கடும் எதிர்ப்பை பதிவு செய்துள்ளது.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால், கனடாவின் துணைத்தூதரை அழைத்து, இந்தியா தனது எதிர்ப்பை பதிவு செய்ததாக தெரிவித்தார்.

இதுதொடர்பான தூதரக ரீதியிலான குறிப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

கடந்த மாதம் 29-ஆம்தேதி ஒட்டாவாவில் நடைபெற்ற கனடா அரசின் நிலைக்குழு முன்பு அந்நாட்டு துணை அமைச்சர் டேவிட் மோரிசன் தெரிவித்த கருத்து, சர்வதேச ஊடகங்களில் வெளியானது குறித்தும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இதுபோன்ற கனடா அரசின் பொறுப்பற்ற நடவடிக்கைகள் இருதரப்பு உறவுகளை பெரிதும் பாதிக்கும் என்றும் அந்த குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக திரு ஜெய்ஷ்வால் கூறினார்.

கனடாவில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகள் கண்காணிக்கப்படுவதாக கூறிய அவர், இதுதொடர்பாகவும் கனடா அரசிடம் இந்தியா புகார் தெரிவித்துள்ளது என்றார்.

அங்குள்ள இந்திய தூதரகத்திலிருந்து வெளியாகும் காணொலி மற்றும் தொலைத்தொடர்புகள் ஒட்டுக்கேட்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

இதுதொடர்பாக, தூதரக ரீதியிலான நடவடிக்கையை இந்தியா மேற்கொள்ளும் என்றும் அவர் தெரிவித்தார்.

கனடாவில் உள்ள இந்திய அதிகாரிகள் தீவிரவாதமும், வன்முறையும் சூழ்ந்த ஒரு பகுதியில் இருப்பதாக அவர் கூறினார்.

இந்நிலையில், கனடா அரசின் நடவடிக்கைகள் இந்தியாவுக்கு எதிராக வன்முறை மற்றும் தீவிரவாத நடவடிக்கைகளை தூண்டும் வகையில் அமைந்துள்ளதாகவும் வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தியா "ஏ" அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது இன்னிங்சில், மூன்றாம் நாளான இன்று ஆஸ்திரேலியா "ஏ" அணி ஆட்டநேர இறுதியில் 3 விக்கெட் இழப்பிற்கு 139 ரன் எடுத்துள்ளது.

ஆஸ்திரேலியாவின் **Mackay**-ல் நடைபெற்று வரும் இப்போட்டியில் இந்தியா "ஏ" அணி முதல் இன்னிங்சில் 107 ரன்னுக்கும், இரண்டாவது இன்னிங்சில் 312 ரன்னுக்கும் ஆட்டமிழந்தது.

ஆஸ்திரேலியா "ஏ அணி முதல் இன்னிங்சில் 195 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

--------

மும்பையில் நடைபெற்றுவரும் இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாளான இன்று ஆட்டநேர இறுதியில் நியூசிலாந்து தனது இரண்டாவது இன்னிங்சில் 9 விக்கெட் இழப்பிற்கு 171 ரன் எடுத்துள்ளது.

நியூசிலாந்து 143 ரன் முன்னிலை பெற்றுள்ளது.

இந்தியாவின் ரவீந்திர ஜடேஜா 4 விக்கெட்டுகளையும், அஸ்வின் மூன்று விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

வாஷிங்டன் சுந்தரும், ஆகாஷ்தீபும் நியூசிலாந்தின் தலா ஒரு விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

முன்னதாக, இந்தியா தனது முதல் இன்னிங்சில் 263 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

<<<<<<END>>>>>>